## சாலை பணிகளுக்காக 3 ஆயிரம் மரங்கள் அகற்றம்

# வெப்ப நகரமானது கோவை: 99 டிகிரியை எட்டி பிடித்தது!

குளுகுளு நகர், ரம்மியமான நகர், சில்லென்ற காற்றுடன் இதமான வெயில் அடிக்கும் நகர் என்று பெயர் பெற்ற கோவை மாநகர் தற்போது வெப்ப நகரமாக மாறியிருக்கிறது. கடந்த சில தினங்களாக வருத்தெடுக்கும் வெயில் காரணமாக சாலையெங்கும் கானல் நீர் கோலங்கள் காட்சி அளிக்கிறது.

நேற்று தமிழகத்தில் வெப்ப நிலை கணக்கிடப்பட்டபோது மதுரை, திருச்சி, வேலூர், பாளையங்கோட்டைக்கு அடுத்தபடியாக 99.32 டிகிரி செல்சியஸ் வெப்ப நிலையுடன் கோவைக்கு 5–வது இடம் கிடைத்துள்ளது! இதுவெயிலோடுவிளையாடி, வெயிலோடு உறவாடி. உப்பு விளைகின்ற தூத்துக்குடியை விட அதிக வெப்பநிலை என்பதுதான் தாங்க முடியாத சோகம். தூத்துக்குடியின் நேற்றைய வெப்ப நிலை 93.74 டிகிரி செல்சியஸ் மட்டுமே. கடற்கரை நகரான புதுவை, கன்னியாகுமரி ஆகியவற்றிலும் குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகி உள்ளது.

கோவை வாசிகளுக்கு ஆறுதலளிக்கும் ஒரே விஷயம் தமிழகத்தின் மிக குறைந்த வெப்பநிலை வால்பாறையில் 84.74 டிகிரி செல்சியஸ் பதிவாகி இருக்கிறது என்பது மட்டுமே!

குளுகுளு நகர் கோவை வெப்பத்தில் தகிக்க என்ன காரணம். காலநிலை மாற்றமா? அல்லது நகரை விரிவாக்கம் என்ற பெயரில் விவசாய நிலங்கள் அழிக்கப்படும் ரியல் எஸ்டேட் தொழிலா? சாலை விரிவாக்கம் என்று மரங்களை வெட்டி துண்டாக்கும் போக்கா? என்ற கேள்விகளுடன் கோவையை சேர்ந்த பசுமை ஆர்வலர் 1 லட்சத்து 20 ஆயிரம் மரங்களை நட்டு வளர்த்து வரும் அரசு பஸ் கண்டக்டர் யோகநாதனை அணுகினோம். அவர் கூறியதாவது:–

முழுக்க முழுக்க கோவையில் மரங்கள் வெட்டி அழிக்கபட்டதுதான் இந்த வெப்பநிலை ஏற்பட முக்கிய காரணமாகும். சாலை விரிவாக்கத்துக்கு எவ்வளவு தேவையோ அதை விட்டு விட்டு சாலையோரத்தில் இருக்கும் மரங்களை வெட்டி அகற்றுவதிலேயே குறியாக இருக்கிறார்கள் நெடுஞ்சாலைத்துறையினர். காரணம் மரம் வெட்டும் தொழிலாளிக்கு கூலி கொடுப்பதில்லை. கிளையை வெட்ட சொன்னால் மரத்தையே வெட்டி விற்று விடுகிறார்.

மரங்களை ஏலம் எடுத்தும் வெட்டி சாய்ப்பதில் ஆர்வம் காட்டிதன் விளைவு ஒரு மரம் இல்லை. மேட்டுப்பாளையம் சாலை விரிவாக்கத்துக்கு 51 அடி போதும் மரத்தை வெட்ட தேவையில்லை என்று எவ்வளவோ போராடினோம் ஆனால் அங்கு மரத்தின் வேரை கூட விடாமல் தோண்டி எடுத்து விட்டனர்.

பறவைகள் மூலமும் காடுகளில் ஏராளமான மரங்கள் உருவாகும் அதாவது வேப்பம் பழத்தை சாப்பிடு[ம்] காகம் அதன் கொட்டைை[ய] எங்காவது ஒரு நிலத்தி[ல்] எச்சமாக போட்டுவிட்[டு] போகும் அது செடியா[க] மரமாக முளைப்ப[து] வாடிக்கை. ஒரு காகம் த[ன்] வாழ்நாளில் 38 ஆயிரம் மர[ம்] வளர காரணமாகிறது என்[று] அறிவியல் கூறுகிறது.

அதுபோல நகரில் த[ற்] போது காகத்தையும், சிட்[டு] குருவியையும் தேடும் நிலை உள்ளது. மனிதனும் மரத்[தை] வளர்க்க விரும்புவதில்லை எப்படி கோவை குளு குளு வென்று இருக்கு[ம்] சென்னையை விட அதி[க] வெப்பம் நிலவுகிறது. மு[ன்] பெல்லாம் வெயில் காலத்தி[ல்] கூட வெயில் தெரியாது இப்போது வெயில் காலத்தி[ல்] வெயில் வருத்தெடுக்கிறது.

ரியல் எஸ்டேட் என்[ற] பெயரில் விவசாய நில[ங்] களையும், அதில் உள்[ள] மரங்களையும் ஒரு கும்ப[ல்] அழித்து வருகிறது. மற்றொ[ரு] புறம் வனப்பகுதிகளி[ல்] ஆசிரமம், கல்லூரிகளை அமைத்து காடுகளை அழித்து வருகின்றன[ர்]. இவை தடுக்கப்படாவிட்டா[ல்] கோவை தமிழகத்தின் வெ[ப்] பம் மிகுந்த நகராக மாறு[ம்]. எனவே இளைஞர்களு[ம்] பள்ளி மாணவர்களும் தங்க[ள்] பிறந்த நாளின்போதாவது ஒ[ரு] மரத்தை நட்டு வளருங்க[ள்]. கோவையின் குழுமை[யை] மீட்டெடுப்போம் என்[று] ஆவேசமாக கூறினார்.